தினமணி

# டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி இலக்கு எட்டப்படுமா?

எஸ். கல்யாணசுந்தரம்

First Published : 10 Jun 2010 03:23:11 AM IST



திருவாரூர் : பாசனத்துக்கு மேட்டூர் அணை திறக்கப்படுவதில் நிலவும் உறுதியற்ற நிலை காரணமாக, காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவைப் பருவத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சாகுபடி இலக்கு எட்டப்படுவதில் நிச்சயமற்ற நிலை நிலவுகிறது.

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஜூன், ஜூலை மாதங்களில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. வேளாண் துறையும் நிகழாண்டுக்கு ஏறத்தாழ 1.15 லட்சம் ஹெக்டேரில் இச் சாகுபடியை மேற்கொள்ள இலக்கு நிர்ணயித்துள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கமாக 43,000 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்படும். இதில் ஆழ்குழாய் கிணற்றின் மூலம் தண்ணீர் பெற்று இதுவரை 3,000 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன. மேலும், ஏறத்தாழ 500 ஹெக்டேரில் நாற்றுகள் விடப்பட்டுள்ளன.

இதேபோல, திருவாரூர் மாவட்டத்தின் வழக்கமான குறுவைச் சாகுபடி பரப்பு 36,000 ஹெக்டேர். இதில் இதுவரை 2,600 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிவுற்றுள்ளன.

ஏறத்தாழ 100 ஹெக்டேரில் நாற்றுகள் விடப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பொருத்தவரை, வழக்கமான பரப்பு 36,000 ஹெக்டேர்.

இதில் இதுவரை 7,000 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன. ஏறத்தாழ 1,000 ஹெக்டேரில் நாற்றுகள் விடப்பட்டுள்ளன.

டெல்டா பகுதியில் வழக்கமாக குறுவைச் சாகுபடிக்கு ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும். ஆனால், அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் நிகழாண்டில் ஜூன் 12 ஆம் தேதி தண்ணீர் திறக்க இயலாத நிலை உள்ளது.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் கடந்த மார்ச் மாதத்தில் 74 அடியாக இருந்தது. காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளிலிருந்து போதிய நீர் வரத்து இல்லாததால், ஓரிரண்டு அடிகளே உயர்ந்து ஜூன் 1 ஆம் தேதி 76 அடியாக இருந்தது. புதன்கிழமை நிலவரப்படி, அணையின் நீர் மட்டம் 79 அடியைத் தொட்டுள்ளது. அணைக்கு நீர் வரத்து கடந்த ஒரு வாரமாகவே சற்று அதிகரித்து வருகிறது.

ஜூன் 12-ல் அணை திறக்காவிடில், டெல்டா மாவட்டங்களில் வழக்கமான சாகுபடி பரப்பான 1.15 லட்சம் ஹெக்டேரில் ஏறத்தாழ 50,000 ஹெக்டேரில்தான் குறுவை சாகுபடி மேற்கொள்ளும் வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கின்றனர் வேளாண் துறையினர்.

ஆழ்குழாய் கிணறுகளை நம்பியே இந்த ஆண்டில் 50 சதவீத பரப்புக்கு சாகுபடி மேற்கொள்ளப்பட்டாலும், எங்கும் நிலவும் நிலத்தடி நீர் மட்டம் குறைவு, கடந்த இரு மாதங்களாக மழை பெய்யாமல் நிலவும் கடும் வெப்பம் மற்றும் மின் மோட்டார்களுக்குச் சீராக வழங்கப்படாத மின்சாரம் ஆகியவை காரணமாக, நிகழாண்டில் சாகுபடி பரப்பிலும் நெல் உற்பத்தியிலும் குறைவு ஏற்படும் என்கிறார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்டத் துணைச் செயலர் பி.ஆர். பாண்டியன்.

இந்நிலையில், நிகழாண்டில் வேளாண் துறை நிர்ணயித்துள்ள சாகுபடி இலக்கை எட்ட இயலாது என்பது ஒருபுறம் இருந்தாலும், இதனால் கிடைக்கும் (நெல்) மகசூலான ஏறத்தாழ 6.32 லட்சம் டன்னிலும் மிகப்பெரிய அளவுக்கு உற்பத்திக் குறைவு ஏற்படும் வாய்ப்புள்ளது.

**வெண்டைக்காய் விவசாயத்துக்கு மாறிவரும் விவசாயிகள்**

First Published : 10 Jun 2010 12:00:00 AM IST



**உளுந்தூர்பேட்டை அருகே விருத்தாசலம் வட்டம் பூண்டியங்குப்பம் கிராமத்தில் பயிரிட்டுள்ள வெண்டைக்காய் செடிகள்.**

உளுந்தூர்பேட்டை, ஜூன் 9: உளுந்தூர்பேட்டை பகுதி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் தோட்டப் பயிரான வெண்டைக்காய் விவசாயத்துக்கு மாறி வருகின்றனர் விவாசாயிகள்.

உளுந்தூர்பேட்டை வட்டம் புகைப்பட்டி, எறையூர், வண்டிப்பாளையம், பெரியக்குப்பம், சின்னக்குப்பம், சேந்தநாடு, மட்டிகை. விருத்தாசலம் வட்டம் பூண்டியாங்குப்பம், மணக்கொல்லை, மோகாம்பரிக்குப்பம் உட்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 500-க்கும் மேற்பட்ட ஏக்கரில் தோட்டப் பயிரான வெண்டைக்காய் விவசாயம் செய்து வருகின்றனர். இவ்விவசாயம் செய்வதற்கு முதலில் நிலத்தை புழுதிபட நன்கு உழுது கொள்ளவேண்டும். பின்னர் அதில் தொழு உரம் (மக்கிய குப்பை) இட்டு கான் பரித்து

நீர்பாய்ச்சி 45 செ.மீ. இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். இப்பயிருக்கு அதிகம் நீர் தேவைப்படும். 15 நாளுக்கு ஒருமுறை மருந்து அடிக்க வேண்டும். இம்முறை மூலம் பயிரிடும்போது 40 நாள்களிலிருந்து 120 நாள்கள் வரை வெண்டைக்காயை அறுவடை செய்துகொள்ளலாம். வெண்டைக்காயை ஒருநாள் விட்டு, ஒரு நாள் பறிக்கவேண்டும்.
நோய்களிலிருந்து பாதுகாப்பு: வீரிய ஓட்டு ரகமான சக்தி, சோனல், மகிகோ 100 ஆகிய ரகங்கள் அதிக விளைச்சளை கொடுக்கின்றன. செடியில் மஞ்சள் தேமல் காணப்பட்டால் செடியை பிடுங்கி அகற்றிவிட வேண்டும். இல்லையென்றால் இந்த நோய் அனைத்து செடிகளுக்கும் பரவி காய்க்கும் தன்மைமை நிறுத்தி விடும். விஷத்தன்மை அதிகமுள்ள மருந்துகளை செடிகளில் அடிப்பதை தவிர்த்தல் வேண்டும். வேம்பு கலந்த மருந்தை அடிப்பது நல்லதாகும். இல்லையென்றால் மலட்டு தன்மை ஏற்பட்டு காய் காய்ப்பது நின்று போகும். வெண்டைக்காய் பயிர் செய்வதன் மூலம் ஒரு ஏக்கருக்கு செலவு போக 4 மாதத்திற்கு ரூ. 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரை கிடைக்கிறது. வெண்டைக்காய் விவசாயம் செய்வதற்கு ஆட்கள் அதிகம் தேவைப்படும். இங்கு அறுவடை செய்யப்படும் வெண்டைக்காய் பண்ருட்டி மற்றும் சென்னை கோயம்பேடு காய்கறி சந்தைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

**பயன்கள்:** வெண்டைக்காய் உணவு உட்கொள்ளும்பொழுது அது மக்களின் நினைவாற்றல் தன்மையை அதிகரிக்கும் என்றும், வெண்டைக்காய் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது என்றும் மருத்துவத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விவசாயிகள் தோட்டக்கலைத் துறையினரின் ஆலோசனைகளை பெறாமல் தாங்களே பயிர் செய்து லாபம் அடைகின்றனர். மேலும் அவர்கள் தோட்டக்கலைத் துறையின் ஆலோசனைகளை பெற்று விவசாயம் செய்தால் வெண்டைக்காய் விவசாயத்தில் தன்னிறைவு பெற்று விவாசாயிகள் மேன்மை அடைய வாய்ப்புகள் உள்ளது என தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

**வரப்பு இல்லாத விவசாயம்: புதிய செயல்திட்டம்**

First Published : 10 Jun 2010 12:00:00 AM IST

சிதம்பரம், ஜூன் 9: கடந்த பல ஆண்டுகளாக சாகுபடி பரப்பளவு வெகுவாக குறைந்து வருகிறது. குறிப்பாக அதிகளவு வேளாண்மை முதலீடுகள், குறைந்து வரும் லாபம், வானிலை மற்றும் சந்தை நிலவரங்கள் காரணமாக ஏற்படும் வேளாண் இழப்பீடுகளினாலும், பாகப்பிரிவினை காரணமாகவும் விவசாய நிலப்பரப்புகள் வெகுவாக குறைந்து வருகின்றன.
இவ்வாறு சாகுபடி பரப்பளவு குறைந்து வரும் சூழலில் விவசாயத்தில் புதிய வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்ய முடியாத காராணத்தால் குறைந்த அளவு மகசூல் வரும் சூழல் நடைமுறையில் உள்ளது. இத்தகைய நடைமுறைச் சூழலில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பொருளாதார நலன்களை பாதுகாக்கவும், விவசாயிகளிடம் புதிய வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து அதிகளவு உற்பத்தி, உற்பத்தித்திறன் பெறும் வகையில் புதிய விவசாய செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.
**வரப்பு இல்லா விவசாயம்:** விவசாய நிலப்பரப்புகள் வெகுவாக குறைந்து வரும் நிலையில் விவசாயிகள் பொருளாதார முன்னேற்றம், புதிய விவசாய தொழில்நுட்ப அறிமுகம், அதிகளவு சந்தை வாய்ப்புகளை

அடிப்படையாக கொண்டுதான் வரப்பு இல்லா விவசாயம் என்ற புதிய விவசாய முறை இந்தியாவின் சில வேளாண் பகுதிகளில் நடைமுறையில் உள்ளது.
இந்த புதிய விவசாய செயல்திட்டத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், விவசாய சுயஉதவிக் குழுக்கள், கிராமப்புற பஞ்சாயத்து மற்றும் சமூக அமைப்புகள் வாயிலாக சிறு மற்றும் குறு விவசாயிகள் ஒன்றாக சேர்ந்து ஒற்றுமையுடன் கூடிப் பேசி, தங்களின் சிறிய நிலங்களை வரப்புகளை அகற்றி ஒன்றுபடுத்த வேண்டும். இவ்வாறு கிராம அளவில் ஒன்றாக 10 முதல் 15 விவசாயிகள் ஒன்றாக சேரும் போது ஒரளவு அதிக பரப்பளவு நிலத்தை ஒன்றாக சாகுபடியின் கீழ் கொண்டு வர முடியும்.

பின்னர் மண் மற்றும் நீர் பரிசோதனை வாயிலாக அறிவியல் பூர்வமாக நிலத்தின் தன்மைக்கேற்ப சாகுபடி பணிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக நிலத்தின் தன்மைக் கேற்ப ஒரு பகுதியில் காய்கள், தோட்டக்கலை பயிர்கள், சிறு தானியங்கள், கால்நடைகளுக்கு தேவையான தீவனப் பயிர்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற தேவைக்கேற்ப தேவைப்படும் வேளாண் விளை பொருள்களை நிலப்பரப்பிற்கு ஏற்ப திட்டமிட்டு சாகுபடி செய்யலாம். வரப்பு இல்லா விவசாயத்துக்கு நிலங்களை வழங்கிய விவசாயிகள் தங்களின் குடும்ப தேவைக்கேற்ப வேளாண் விளை பொருள்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.
இப்புதிய செயல் திட்டத்தில் உருவாக்கப்படும் பொதுவான விவசாய கட்டமைப்புகளை பொதுவான விவசாய நிலப்பரப்புகளில் குறிப்பாக வாய்க்கால் பகுதிகளில், புறம்போக்கு இடங்களில் அமைத்துக் கொள்வதன் வாயிலாக பல நிகழ் மற்றும் எதிர்கால தேவை மற்றும் பொது பயன்பாடு பிரச்னைகள் ஏற்பட்டால் தீர்வுகள் பெறலாம். இவ்வாறு வரப்பு இல்லாத விவசாயத்தின் கீழ் செயல்படும் விவசாயிகள் ஒரு விவசாய சங்கமாக தங்களை பதிவு செய்து மத்திய, மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள், நலத்திட்டங்களில் பங்கு பெறும் வாய்ப்பும் உள்ளது.


மேலும் நிதி நிறுவனங்கள், வங்கிகள், காப்பீடு நிறுவனங்களில் விவசாயிகள் கூட்டாக இணைந்து நிதி சேவைகளை பெறலாம். இச்செயல் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் நிலங்கள் தனியாகவே பதிவு செய்யப்பட்டு பட்டா உள்ள நிலையில் தனி நபராகவும், விவசாய நலத்திட்டங்களில் பங்கு பெற முடியும்.
பிற பயன்கள்: சிறு மற்றும் குறு விவசாயிகள் திட்டமிட்டு விவசாயப் பணிகளை இணைந்து ஒற்றுமையுடன் செயல்படுத்தும் போதும் அதிகளவு வேளாண் முதலீடுகளை செய்ய முடியும். உதாரணமாக சிறு விவசாயி தனிப்படை முறையில் ஆழ்கிணறுகள் தனியாக அமைப்பதை விட கூட்டாக அமைக்கும் போது செலவுகள் குறையும், பல புதிய விவசாய தொழில்நுட்பங்களாக சொட்டு நீர் பாசனம் (Drip irrigation), தெளிப்பு நீர் பாசனம் (sprinkler Irrigation) ஆகியவற்றில் அதிகளவு வேளாண் முதலீடுகள் செய்து தங்கள் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை வெகுவாக பெருக்க முடியும்.

விவசாயிகள் தங்கள் நிலத்தின் அளவுக்கு ஏற்பவும், தங்களின் மனித உழைப்புக்கு ஏற்பவும் வரும் வருமானத்தை பகிர்ந்து கொள்ளலாம். வெளி ஊர்களில் உள்ள விவசாயிகளின் நிலங்களை இணைத்துக் கொள்வதன் மூலம் பல விவசாய நிலங்கள் உற்பத்தி இல்லாமல் தரிசாக கிடப்பது தவிர்க்கப்படும். அவர்களுக்கு விவசாயிகள் நிர்ணயம் செய்த குத்தகைப் பணத்தை பருவம் தோறும் வழங்கலாம். பெரிய வேளாண் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு முன்பே விலை நிர்ணயம் செய்த

விலையின் அடிப்படையில் வேளாண் விளை பொருள்களை உற்பத்தி செய்து விற்று அதிகளவு லாபம் பெறலாம.
எனவே தமிழகத்தின் விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாவதைத் தடுக்கவும், விவசாயிகளின் பொருளாதார நலன்களை பாதுகாக்கவும் இதுபோன்ற புதிய வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து அதிகளவு உற்பத்திகள் வாயிலாக அதிகளவு லாபம் பெறலாம்.
வரப்பு இல்லா விவசாயத்தை கிராமங்களில் அறிமுகம் செய்து, விவசாயிகள் ஒற்றுமையுடன் செயல்பட்டால் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிகளவு லாபம் பெற முடியும் என்கிறார் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன்.

**பலாவுக்கு அதிக "கிராக்கி'**

First Published : 10 Jun 2010 12:00:00 AM IST



பண்ருட்டி, ஜூன் 9: பலாப் பழத்தில் இருந்து பிரித்தெடுக்கப்படும் ஜாக்கலின் எனும் நுண்பொருள் மனித குலத்தை அச்சுறுத்தும் எய்ட்ஸ் நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்தும் திறனுள்ளதாக பிரான்சு நாட்டில் கண்டறியப்பட்டுள்ளதாக வேளாண்மை உதவி இயக்குனர் பி.ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.
÷பழ வகையில் அதிக எடையும் மகசூல் திறனும் கொண்டது பலா. பண்ருட்டி பலா பழத்தில் அதிக சுவை உள்ளதால் இதற்கு தனிப் பெருமை உண்டு. ஆரம்ப காலத்தில் வரப்பு ஓர பயிராகவும், வீட்டுத்

தோட்டத்திலும், நிழல் தரும் மரமாகவும் அறை கலன்கள் மற்றும் இசைக் கருவிகள் செய்வதற்காகவும் வளர்க்கப்பட்டது.
÷பலா மரத்தின் சிறப்புகளையும், அதிக வருவாய் ஈட்டும் திறன், குறைந்த பராமரிப்புச் செலவுகளை உணர்ந்த விவசாயிகள் தற்போது ஏக்கர் கணக்கில் பயிரிட்டு பண்ருட்டிக்கு பெருமை சேர்த்து வருகின்றனர்.
÷இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்கநர் பி.ஹரிதாஸ் கூறியது: வறட்சி மற்றும் கனமழை பகுதியில் வளரும் பலா மரங்கள் தொடர்ந்து 100 ஆண்டுகளுக்கு மேலாக பலன் தரக்கூடியவை. மஞ்சள், வெள்ளை, ஆரஞ்சு மற்றும் இளம் சிவப்பு நிற சுளைகளைக் கொண்ட பல ரக மரங்கள் தமிழகத்திலும், கர்நாடகத்திலும் காணப்படுகின்றன. நன்கு வளர்ந்த மரம் 600 காய்களுக்கு மேல் காய்க்கும். மேலும் பலா மரம் விலை மதிப்பு மிக்கது.
÷கேரளம், கர்நாடகம் மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் பலாச்சுளை, பிஞ்சு, முற்றாத காய் ஆகியவற்றில் இருந்து பலா ஜூஸ், அல்வா, அப்பளம், வற்றல், மாவு ஆகியவை தயாரித்து மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர்.
÷தமிழகத்தில் பலாவை மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களாக மாற்றுவதற்கான பணிகளை விவசாயத் துறையின் மேற்கொண்டுள்ளனர்.÷தமிழகச் சந்தையில் பலாவின் விலை ஏற்றத் தாழ்வுகளை கொண்டுள்ளது. சாகுபடியாளர்கள் பயன்பெற வேண்டுமானால் பலாவை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்ற வேண்டும். விற்பனை வாய்ப்பை கண்டறிய கூட்டுறவு சங்கத்தின் மூலம் தொழிற்சாலைகளை உருவாக்க தொழில் முனைவோர் உருவாக வேண்டும்.÷மேலும் விபரங்களுக்கு பண்ருட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்கநர் அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயனடையலாம் என பி.ஹரிதாஸ் தெரிவித்துள்ளார்.

**கருவேல் மரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்**
First Published : 09 Jun 2010 11:05:27 AM IST

திருவாடானை, ஜூன் 8:ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை பகுதி விவசாயிகள் அதிக லாபம் தரும் கருவேல் மரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
திருவாடானை தாலுகா தமிழகத்தின் 2-வது நெல் களஞ்சியம் என பெயர் பெற்றது. இங்கு சுமார் 1.50 லட்சம் ஹெக்டேர் நிலப்பரளவில் விவசாயம் நடைபெறுகிறது.
கடந்த சம்பா பருவ காலத்தில் பருவமழை தாமதமாக பெய்ததால் 2-வது முறை விவசாய நிலங்களை உழுது விதைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இருப்பினும் நெல் பயிர்கள் பல்வேறு இன்னல்களுக்கு இடையே அறுவடை நேரத்தில் விவசாயிகள் நெல் பழம், பூஞ்சான் போன்ற நோய்களின் தாக்குதலால் பெரும் நஷ்டம் அடைந்தனர்.
இருப்பினும் விளைந்த நெல் மூட்டைகளை விற்பனை செய்யலாம் என்று விவசாயிகள் விற்பனை நிலையத்தை நாடியபோது முதல் சன்ன ரகம், மோட்டா ரகம் என்று தரம் பிரித்து குவிண்டாலுக்கு ரூ.1000 என்று விலை நிர்ணயம் செய்ததால் விவசாயிகளுக்கு இதிலும் பெரும் நஷடம் ஏற்பட்டது.

இதனால் விவசாயிகள் இந்த ஆண்டு விவசாயம் செய்வதை விட எந்த வித செலவும் இல்லாமல் கருவேல் மரங்கள் வளர்த்து விற்றால் அதிக லாபம் பெறலாம் என்ற நோக்கில் வயல்களில் கருவேல் மரங்கள் மரம் வளர்க்க ஆர்வம் காட்டியுள்ளனர்.

இது குறித்து பில்லுகுடி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராமனாதன் கூறியது:

பல்வேறு இன்னல்களுக்கிடையே விவசாயம் செய்து, அறுவடை செய்யும் நேரத்தில் கொடிய நெல் பழ நோய் தாக்குதலால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இது தொடர்பாக அமைச்சர் முதல் அதிகாரிகள் வரை பார்வையிட்டு நிவாரணம் வழங்குவதாகக் கூறினர். இது நாள்வரை வழங்கப்படவில்லை.

நெல் விலை கடந்த ஆண்டு மூட்டைக்கு ரூ.1000 வரை கிடைத்தது. ஆனால் இந்த ஆண்டுகுவிண்டாலுக்கு ரூ.1000. அதுவும் நெல் ரகம் பிரித்து வாங்குவதால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே எப்பொழுதும் கோடை காலத்தில் வயல்களை சுத்தம் செய்து உழவுப்பணி மேற்கொள்வர். ஆனால் பெரும்பாலான விவசாயிகள் இதில் ஆர்வம் இல்லாமல் கருவேல் மரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாய நிலங்களில் கருவேல் மரங்கள் வளர்த்தால் உணவுக்கு பெரும் பஞ்சம் ஏற்படும். எனவே அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி விவசாயிகளின் துயர் துடைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

**மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை அளிப்பு**

First Published : 09 Jun 2010 10:28:33 AM IST

கோவில்பட்டி, ஜூன் 8: கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதியில் மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கான ஊக்கத் தொகை வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

வன விரிவாக்கத் துறை சார்பில் 2007-ம் ஆண்டில் தனியார் நிலங்களில் தீக்குச்சிக்கு பயன்படுத்தப்படும் மட்டி, தேக்கு, சவுக்கு, வேம்பு உள்ளிட்ட மரங்கள் வளர்ப்போருக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

அதில், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிக்கு உள்பட்ட எட்டையபுரம், கரடிகுளம், சில்லாலங்குளம் ஆகிய பகுதிகளில் சுமார் 33.5 ஏக்கர் பரப்பளவில் மரம் வளர்க்கும் பணியில் சுமார் 20 விவசாயிகள் ஈடுபட்டனர். அதில் மரம் வளர்த்த 10 விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில், ஊக்கத் தொகை வழங்கும் விழா கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட வன விரிவாக்க அலுவலர் செல்லம் தலைமை வகித்தார். ஊக்கத் தொகை தலா ரூ. 2 ஆயிரத்துக்கான காசோலையை விவசாயிகளுக்கு, ஊராட்சி ஒன்றியத் தலைவர் பீக்கிலிபட்டி வீ.முருகேசன் வழங்கினார்.

விழாவில், இனாம்மணியாச்சி ஊராட்சித் தலைவர் பச்சமால், வனச்சரகர்கள் மணிசுந்தரராஜன், மாக்கண்டகிருஷ்ணன், தோட்டக் காவலர்கள் மரியஜோதி, வெள்ளத்துரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**அழகியமண்டபத்தில் பி.டி. கத்தரிக்காய்க்கு எதிரான கருத்தரங்கம்**

First Published : 09 Jun 2010 10:25:02 AM IST

தக்கலை, ஜூன் 8: அழகியமண்டபத்தில் மரபணு மாற்ற விதையான பி.டி. கத்தரிக்காய்க்கு எதிரான கருத்தரங்கம் விவசாய நெருக்கடியும், பாதிப்புகளும் எனும் தலைப்பில் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட உலக சமூக மாமன்றம் சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பங்கேற்ற அகில இந்திய விவசாய சங்க மத்தியக் குழு நிர்வாகி பேராசிரியர் சந்திரா பேசியதாவது:

பி.டி. கத்திரிக்காய் 22 வகையான பரிசோதனைக்கு உள்படுத்துதல் வேண்டும். ஆனால் மான்சான்டோ கம்பெனி அவ்வாறு செய்யவில்லை.

அமெரிக்க விஞ்ஞானி ஷெர்லி மற்றும் இங்கிலாந்து நிறுவனம் பி.டி. கத்தரிக்காய் குறித்து 17 விதமான ஆய்வுகளை மேற்கொண்டு, இது மனிதனுக்கு ஏற்றதல்ல என அறிவித்துள்ளார்கள்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுகளை உள்கொண்டால் பலவிதமான உடல்நலக்கேடுகள் உண்டாகும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். மேலும், இவ்வகை உணவை உண்பவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால், நோய்கள் எளிதில் தொற்றிக்கொள்ளும் அபாயமும் உள்ளது என கூறுகின்றனர்.

உயிர் காக்கும் மருந்துகள் உரிய முறையில் வேலை செய்யமுடியாது போய் விடுகிறது. எனவே, நோய்க்கான சிகிச்சைகள் பயனற்று போய்விடலாம். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் இத்தகைய பயிர்கள் உற்பத்தியும், இறக்குமதியும் முற்றிலுமாக தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், இந்திய அரசாங்கம் பி.டி. கத்திரிக்காயைத் தொடர்ந்து பல வகையான உணவுப் பயிர்களில் மரபணு மாற்றத்தினைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது. பி.டி. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களின் விதைகளை விவசாயிகள் மீண்டும் பயிரிட முடியாது. எனவே, மரபணு மாற்றப் பயிர்களால் விவசாயிகளுக்கோ அல்லது அதனைப் பயன்படுத்தும் மக்களுக்கோ எந்தப் பயனும் இல்லை. கேடுதான் விளைகிறது.

எனவே பி.டி. கத்தரிக்காய் இந்தியாவில் காலூன்றுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றார் அவர்.

கருத்தரங்கிற்கு, ஒருங்கிணைப்பாளர் எல்.சி. ஜேக்கப் தலைமை வகித்தார். ஆர்.யு.சி. தொண்டு நிறுவன இயக்குநர் மரிய ஜேம்ஸ், அறக்கட்டளை தலைவர்கள் பொன்னம்பலம், லால்மோகன், விவசாய சங்கப் பிரதிநிதிகள் சைமன் சைலஸ், மத்தியாஸ் மற்றும் விவசாய சங்கம், உழைக்கும் மாதர் இயக்கம், பெண்கள் பணிக்குழு, பெண்கள் கூட்டமைப்பு, நவஜோதி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்கள் பங்கேற்றனர்.

ஜனநாயக மாதர் சங்க மாநிலக் குழு நிர்வாகி டி.ஆர். மேரி வரவேற்றார். ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட செயலர் பிரசாத் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வேளாண் இயந்திரங்கள்**

First Published : 09 Jun 2010 01:03:42 PM IST

ஈரோடு, ஜூன் 8: நெல் சாகுபடியில் ஆள்கள் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வேளாண் இயந்திரங்கள் வழங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவ.முத்துக்குமாரசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

ஈரோடு மாவட்டத்தில் முதற்கட்டமாக கணபதிபாளையம், நசியனூர், மொடக்குறிச்சி, பெத்தாம்பாளையம், நல்லாம்பட்டி, பெரியகொடிவேரி, கள்ளிப்பட்டி, பாரியூர் நஞ்சுகவுண்டம்பாளையம் ஆகிய 8 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மையங்களில் நடவு இயந்திரம், மினி டிராக்டர், டில்லர், களையெடுக்கும் இயந்திரம், மருந்து அடிக்கும் கருவி, களையெடுக்கும் கருவிகள் ஆகியவை சங்கங்களின் சார்பில் கொள்முதல் செய்து வாடகைக்கு விடப்படும்.

குறிப்பாக நெல் சாகுபடியில் ஆள் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக, நெல் நடவு செய்யும் இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நெல் நடவு இயந்திரங்களை விவசாயிகள் கூட்டறவு சங்கங்களில் இருந்து வாடகைக்குப் பெற்றுப் பயனடையலாம்.

இது தொடர்பாக கணபதிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு உள்பட்ட பகுதியில் வரும் வியாழக்கிழமை களப்பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம் நடைபெறுகிறது.

மேலும் விவசாயிகள் அருகில் உள்ள கூட்டுறவு சங்கங்களை அணுகி, தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டால், ஆகஸ்ட் மாதத்தில் உள்ள நடவு பணிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்படும். எனவே விவசாயிகள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், நெல் அறுவடை இயந்திரங்களை கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயன்படுத்தும் திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தினமலர்

**மானிய விலையில் தானிய சேமிப்பு கலன்**

கடலூர் : தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 50 சதவீத மானியத்தில் தானிய சேமிப்பு கலன் வழங்கப்பட்டு வருகிறது.இதுகுறித்து வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடலூர் வட்டார விவசாயிகளுக்கு ஒரு டன் மற்றும் அரை டன் தானிய சேமிப்பு கலன்கள் 50 சதவீத மானியத்தில் வழங் கப்படுகிறது. தேவைப்படும்

விவசாயிகள் கடலூர், கீழ்குமாரமங்கலம் மற்றும் தூக்கணாம்பாக்கம் வேளாண் விரிவாக்க மையங்கள் அல்லது அந்தந்த பகுதிகளில் உள்ள உதவி வேளாண் அலுவலர் களை தொடர்பு கொண்டு பயனடையலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**ஆறு, வடிகால்களில் தூர்வாரும் பணி இல்லை குறுவை சாகுபடி பாதிக்கும் அச்சத்தில் விவசாயிகள்**

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி பகுதியில் ஜூன் பத்தாம் தேதி ஆகியும் ஆறுகள், வடிகால்கள் தூர்வாரும் பணி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்தாண்டு நிஷா புயல் காரணமாக திருவாரூர் மாவட்டம் மழை, வெள்ளத்தால் மோசமாக பாதிக்கப்பட்டு ஆறுகள், வடிகால்கள், நீர்வழிப்பாதையின் கரைகள் சேதமடைந்தது. தற்போது மேட்டூர் அணை மூடப்பட்டு ஐந்து மாதங்களுக்கு மேலாகியுள்ளது.

ஆனால், இன்று வரை திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி பகுதியின் முக்கிய வடிகாலான வளவனாறு கரை உயர்த்தவோ, தூர்வாரவோ பணி ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்தாண்டு தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டும், கடும் மழை காரணமாக கட்டிமேடு, பாண்டி, வடபாதி, பிச்சன்கோட்டகம் வரை வளவனாற்றின் கரைகள் உடைந்து இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டது. முழுமையாக சம்பா மகசூல் நடக்கவில்லை.கடந்த மூன்றாண்டாக மறைக்காகோரையாற்றின் நேமம் வடிகாலில் கீழ்குமுளி பழுதடைந்து சரி செய்யப்படாததால் நேமம், இளநகர், நெடும்பலம் பகுதியில் 100க்கணக்கான ஏக்கர் விளை நிலம் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. இதுதொடர்பாக பொதுப்பணித்துறை அதிகாரிகளை கிராம மக்கள் அணுகியபோது, ""நீர்குமுளியை சரி செய்ய 6.5 லட்சம் ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரித்து அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசின் உத்தரவுக்காக காத்திருக்கிறோம்,'' என்று தெரிவிக்கின்றனர்.

மழை தொடர்ந்து பெய்தால், "விரைவில் மேட்டூர் அணை திறக்கப்படும்' என வேளாண் துறை அமைச்சர் தரிவித்துள்ளார். நடப்பாண்டிலும் கீழ்குமுளி சரி செய்யப்படாததால் வரும் பட்டத்தில் சாகுபடி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. "பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடன் அத்யாவசியப் பணிகளையும், கீழ்குமுளி மாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்' என விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜூன் 15ல் காளான் வளர்ப்பு பயிற்சி**

பனமரத்துப்பட்டி: சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை: காளான் அனைவரும் விரும்பி சாப்பிடும் சிறந்த சைவ உணவு. காளானில் நார்ச்சத்து, புரதச்சத்து அதிகமாகவும், மாவுச்சத்து, கொழுப்புச்சத்து மிக குறைவாகவும் உள்ளது.

காளான்களுக்கு ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் குணமும், ரத்த சோகை நோய் வராமல் தடுத்து வாழ்வு காலத்தை அதிகரிக்கும்.

காளான் சர்க்கரை நோயாளிகளுக்கு சிறந்த உணவு. வேளாண்மை சார்ந்த உப தொழிலில் காளான் வளர்ப்பு மூலம் அதிக லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. கிராம வேலை வாய்ப்பை அதிகரிக்கவும், பண்ணை மகளிரின் ஓய்வு நேரத்தை உபயோகமான முறையில் செலவிட்டு, கூடுதல் லாபம் பெறலாம். ஒரு ஹெக்டேர் பரப்பளவில் ஒரு ஆண்டில் காய்கறியில் இருந்து பெறும் புரதச்சத்தை விட, 200 மடங்கு அதிகமாக காளான் சாகுபடியில் கிடைக்கும்.

காளான் வளர்ப்பை அதிகரிக்கும் நேக்கில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் சேலம் சந்தியூர் வேளாண் அறிவியில் நிலையத்தில் ஜூன் 15ம் தேதி காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. காளான் வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்கள் 14ம் தேதி மாலை 5 மணிக்குள் தங்கள் பெயரை சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் பதிவு செய்து காள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.75 ஏக்கரில் 62 குவிண்டால் மஞ்சள் உற்பத்தி விவசாயி சாதனை

கோபிசெட்டிபாளையம்: மஞ்சளில் குறைந்த ஏக்கரில் அதிக மகசூல் எடுத்து கோபி விவசாயி சாதனை புரிந்துள்ளார்.கோபி கோரக்காட்டூர் பகுதியை சேர்ந்த விவசாயி ரவீந்திரன் (40); "யு-7' பாசன சபை துணைத் தலைவராக உள்ளார். கடந்த போகத்தில் 1.75 ஏக்கரில் பி.பி., ரக மஞ்சளை ரவீந்திரன் பயிரிட்டார். காய்ந்த மஞ்சள் 62.5 குவிண்டாலும், வேக வைக்காத மஞ்சள் 4,000 கிலோவும் கிடைத்தது.

மஞ்சளில் அதிக மகசூல் எடுத்த விவசாயி ரவீந்திரனை, கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் சென்னியப்பன் மற்றும் பாசன சபை நிர்வாகிகள் பாராட்டினர்.

### தேங்காய் பருப்பு விலை 35 ரூபாயை தாண்டியது

கோபிசெட்டிபாளையம்: கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் பருப்பு விலை 35 ரூபாயை தாண்டியது. கோடை வெயில் காரணமாக இளநீர் உற்பத்தி அதிகரிப்பு, துவரம்பருப்பு விலை உயர்வு காரணமாக ஹோட்டல்களில் தேங்காய்க்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. தென்னை விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைத்தது. கோடையில் வெயில் சுட்டெரித்த போதும், விவசாயிகள் தேங்காய் பருப்பு உற்பத்தி செய்யாமல், இளநீர் மற்றும் தேங்காயாக விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டினர்.

இரண்டு மாதங்களாக தேங்காய் பருப்பு வரத்து குறைந்தது. கோடை முடிந்து பருவ மழை துவங்கியுள்ளது. தற்போது வழக்கம் போல் தேங்காய் பருப்பு உற்பத்தி பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சத்தி

ரோட்டில் உள்ள கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நடப்பு வாரம் 273 மூட்டை தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது.

கடந்த வாரத்தை விட 80 மூட்டை அதிகமாக வந்தது. தேங்காய் பருப்பு கிலோ அதிகப்பட்சமாக 35.27 ரூபாய், குறைந்தபட்சமாக 33.06 ரூபாய், சராசரியாக 34.56 ரூபாய்க்கு விற்றது. கடந்த வாரத்தை விட தேங்காய் பருப்பு விலை ஒரு ரூபாய் 21 பைசா அதிகரித்திருந்தது. நடப்பு வாரம் நான்கு லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நடப்பு வாரம் 28 மூட்டை எள் ஏலத்துக்கு வந்தது. அதிகபட்சமாக கிலோ 48.49 ரூபாய், குறைந்தபட்சமாக 41.26 ரூபாய்க்கு விற்றது. 62 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நடப்பு வாரம் எள் வர்த்தகம் நடந்தது.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜூன் 15ல் காளான் வளர்ப்பு பயிற்சி**

பனமரத்துப்பட்டி: "சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜூன் 15ம் தேதி நடக்கும் காளான் வளர்ப்பு தொழிற்பயிற்சியில் பங்கேற்க 14ம் தேதி மாலை 5 மணிக்குள் தங்கள் பெயரை முன் பதிவு செய்ய வேண்டும்' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: காளான் அனைவரும் விரும்பி சாப்பிடும் சிறந்த சைவ உணவு. காளானில் நார்ச்சத்து, புரதச்சத்து அதிகமாகவும், மாவுச்சத்து, கொழுப்புச்சத்து மிக குறைவாகவும் உள்ளது. காளான்களுக்கு ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும் குணமும், ரத்த சோகை நோய் வராமல் தடுத்து வாழ்வு காலத்தை அதிகரிக்கும். காளான் சர்க்கரை நோயாளிகளுக்கு சிறந்த உணவு. வேளாண்மை சார்ந்த உப தொழிலில் காளான் வளர்ப்பு மூலம் அதிக லாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

கிராம வேலை வாய்ப்பை அதிகரிக்கவும், பண்ணை மகளிரின் ஓய்வு நேரத்தை உபயோகமான முறையில் செலவிட்டு, கூடுதல் லாபம் பெறலாம். பண்ணை கழிவுகளை விலை மதிப்புமிக்க உணவு உற்பத்திக்கு பயன்படுத்தி, சுற்றுச்சூழல் மாசுபாட்டை தடுக்கலாம். ஒரு ஹெக்டேர் பரப்பளவில் ஒரு ஆண்டில் காய்கறியில் இருந்து பெறும் புரதச்சத்தை விட, 200 மடங்கு அதிகமாக காளான் சாகுபடியில் கிடைக்கும். காளான் வளர்ப்பை அதிகரிக்கும் நேக்கில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் சேலம் சந்தியூர் வேளாண் அறிவியில் நிலையத்தில் ஜூன் 15ம் தேதி காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. காளான் வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்கள் 14ம் தேதி மாலை 5 மணிக்குள் தங்கள் பெயரை சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கறுப்பு நிற திராட்சை வரத்து அதிகரிப்பு**

நாமக்கல்: நாமக்கல் பகுதியில் கறுப்பு நிற திராட்சை விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது. தேனி, கம்பம் பகுதியில் கறுப்பு நிற திராட்சை அதிகளவில் விவசாயம் செய்யப்படுகிறது. அங்கு உற்பத்தி செய்யப்படும் திராட்சை மாநிலம் முழுவதும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அப்பகுதியில் விளையும் திராட்சை சுவை மிகுந்திருப்பதால், அவற்றுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகம். தற்போது கறுப்பு நிற திராட்சை சீஸன் துவங்கியுள்ளதையடுத்து, நாமக்கல்லுக்கு அதிகளவு விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. ஒரு கிலோ கறுப்பு நிற திராட்சை 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து திராட்சை விற்பனையாளர் கூறுகையில், ""கறுப்பு நிற திராட்சை தேனி, கம்பம் பகுதியில் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. 110 நாள் இடைவெளியில் அவை அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டுவரப்படும். இந்தாண்டு நல்ல விøளைச்சல் கிடைத்துள்ளது. தற்போது, அந்த மாவட்டத்தில் மழைப்பொழிவு இருப்பதால் திராட்சை அறுவடை செய்யப்படவில்லை. ஓரிரு வாரத்தில் அதிகளவு திராட்சை விற்பனைக்கு வந்துவிடும். வரத்து அதிகரித்தால் திராட்சை விலை குறைய வாய்ப்புள்ளது,'' என்றார்.

**காய்கறி வரத்து குறைவு; விலை உயர்வு விற்பனை மந்தம்**

சிவகங்கை: சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறி வரத்து குறைவால், விற்பனை மந்தமாக இருந்தது. கடந்த வாரத்தை விட, விலையும் அதிகரித்துள்ளது. நேற்றைய விலை நிலவரம் (கிலோ): சென்ற வாரம் 20 ரூபாய்க்கு விற்ற கத்தரிக்காய்- 24; 15 க்கு விற்ற வெண்டைக்காய்- 22; 24 க்கு விற்ற பாகற்காய்- 32; 30 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 40; 24 க்கு விற்ற கேரட்- 40; முள்ளங்கி- 16; 15 க்கு விற்ற உருளை கிழங்கு- 16; முட்டை கோஸ்- 15; 30 க்கு விற்ற தக்காளி- 20; கருணை கிழங்கு- 40; இஞ்சி- 100; அவரைக்காய்- 40; 50 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 60; 16 க்கு விற்ற சின்ன வெங்காயம்- 20; பெல்லாரி வெங்காயம்- 12; காலி பிளவர்- 20; 24 க்கு விற்ற சேணை கிழங்கு- 40; 24 க்கு விற்ற சேம்பு- 40; 24 க்கு விற்ற பச்சை மிளகாய்- 30; 10 க்கு விற்ற பீட்ரூட்- 16; மாங்காய்- 20; சவ்சவ்- 12; சோயா பீன்ஸ்- 60; எலுமிச்சை- 30; 12 க்கு விற்ற பூசணி- 12 ரூபாய்.

பழம்: ஆப்பிள்- 100, இரண்டாவது ரகம் 90; சாத்துக்குடி-50; ஆரஞ்சு- 60; மாம்பழம், கடந்த வாரம் 40 க்கு விற்ற சப்பட்டை- 30, 30 க்கு விற்ற பாலாமணி- 20, 30 க்கு விற்ற காசாலட்டு-20; சப்போட்டா-10; திராட்சை, வெள்ளை- 60, கறுப்பு-40 ரூபாய். சிவகங்கையில் மளிகை பொருள் விலை: துவரம் பருப்பு-68, நயம்-72; தட்ட பயறு- 52; கடலை பருப்பு- 34; உளுந்தம் பருப்பு- 78; நயம்- 82; கொண்ட கடலை- 34; பாசி பருப்பு- 88; பாசி பயறு- 80; மொச்சை பயறு- 48, வெள்ளை மொச்சை- 64; பட்டாணி- 22, வெள்ளை பட்டாணி- 26; மல்லி- 40; புளி- 48, நயம்- 52; வத்தல்- 65, இரண்டாவது ரகம்- 40; மலை பூண்டு- 100, சாதா ரகம்- 60; சோம்பு- 150; சீரகம்- 180; கடுகு- 50; மிளகு -200 ரூபாய். அரிசி (கிலோ): கல்சர் பொன்னி- 30;

டீலக்ஸ் பொன்னி- 28; ஐ.ஆர்., 20 கல்சர்- 21; பச்சரிசி- 22; இட்லி அரிசி- 22 ரூபாய். எண்ணெய் விலை: கடலை எண்ணெய்- 68; தேங்காய் எண்ணெய்- 80; நல்லெண்ணெய்- 90; பாமாயில்- 44 ரூபாய்.

**அரிசி ஆலையில் விரைவில் உற்பத்தி**

காரைக்குடி: தினமலர் இதழ் "சிவகங்கையை மீட்போம்' பகுதியில், மூடப்பட்ட தொழிற்சாலைகளின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டன. இதுகுறித்து புதுவயல் பாண்டியராஜன் அரிசி ஆலை நிர்வாகத்தினர் கூறுகையில், "எங்களது ஆலை நலிவடைந்து மூடப்படவில்லை. இயந்திரங்கள் நவீனப்படுத்தப்பட உள்ளன. சீரமைப்பு பணிக்காக தற்காலிகமாக உற்பத்தி நிறுத்தப்பட்டு, விரைவில் தொடங்கும்,' என்றனர்.

**தொழிலாளர் பற்றாக்குறை எதிரொலி புகளூரில் தென்னை சாகுபடி பாதிப்பு பயிற்சி பள்ளி அமைக்க கோரிக்கை**

வேலாயுதம்பாளையம்: தென்னை சாகுபடி திருப்தியாக இருந்தும் போதிய பணியாளர் இல்லாதது, மற்றும் அரசு ஆதரவு இல்லாததால் உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கேரளாவுக்கு அடுத்து அதிகப்படியாக தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ள மாநிலமாக தமிழகம் உள்ளது.

இங்கு 3.83 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. கரூர், ஈரோடு, நாமக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் 15ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. புகளூர் சுற்றுப்பகுதியில் நொய்யல் முதல் தளவாபாளையம், புன்னம் சுற்றுப்புறம் வரை ஐந்தாயிரம் ஏக்கருக்கும் மேல் சாகுபடி செய்யப்படுகிறது.

தென்னை சாகுபடியும் உற்பத்தியும் நல்ல வளர்ச்சி கண்டுள்ள நிலையில், தென்னை ஏறும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக, 50 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய் அறுப்பதற்கு பதிலாக 80 நாள் வரை தொழிலாளருக்காக காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் விவசாயிகளும், குத்தகைதாரரும் நஷ்டமடைகின்றனர்.

கடந்த தலைமுறைகளில் தென்னை ஏறும் தொழிலை செய்துவந்த தொழிலாளர்களின் பிள்ளைகள், தற்போது கல்வி பெற்று மாற்று தொழிலுக்கு சென்றுவிட்டதால் வருங்காலத்தில் முற்றிலும் மரம் ஏறும் தொழிலாளியே இல்லாத நிலை ஏற்படும் சூழல் உள்ளது.

இதனிடையே, தற்போது தென்னைகளை தாக்கும் "ஈரியோபைட்' செம்பேன் தாக்குதல் காரணமாக மரம் பாதிக்கப்படுவது அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்த எவ்வித முயற்சியும் அரசு தரப்பில் மேற்கொள்ளப்படவில்லை. தோட்டக்கலை மற்றும் வேளாண் துறை மற்ற பயிர்களின் உற்பத்தியில் காண்பிக்கும் ஆர்வம், தென்னை சாகுபடியில் காண்பிக்கவில்லை. இதனால், அவ்வப்போது ஏற்படும் நோய் தாக்குதலின் போது போதிய விழிப்புணர்வு இல்லாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

தேங்காய் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் சங்க செயலாளர் புகளூர் ஹபிபுல்லா கூறியதாவது: தேங்காய் ஒன்றுக்கு அறுவடை கூலி 50 பைசா வரை ஆகிறது. தேங்காய் உரிக்கவும், வாகனத்தில் ஏற்றவும் தொழிலாளர் பற்றாக்குறை பிரச்னை தொடர்கிறது. தென்னை மரம் ஏறும் தொழிலாளர், தேங்காய் உரிக்கும் தொழிலாளர், "லோடு' ஏற்றும் தொழிலாளர் என தென்னை சாகுபடி சார்ந்த பணிக்கு தொழிலாளரை அதிகப்படுத்த போதிய பயிற்சியும், ஊக்கத்தொகை, சலுகை மற்றும் காப்பீடு வசதியுடன் தென்னை வளர்ச்சி வாரியம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து கொப்பரையாகவோ, புண்ணாக்காகவோ இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்க வேண்டும். தேங்காய் எண்ணெய் உணவு மற்றும் முடி பராமரிப்புக்கு பயன்படுத்துவதோடு, மாற்று பயன்பாடு குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். மாநில அரசும், மத்திய அரசும், தென்னை வளர்ச்சி வாரியமும் தேங்காய் உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தேங்காய் உற்பத்தியாளர் சங்கம் சார்பில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கை: தென்னை உற்பத்தி அதிகம் உள்ள இடங்களில் மரம் ஏற பயிற்சி மையம் அமைக்க வேண்டும். தென்னையைச் சார்ந்த உபதொழில்கள் பெருக அரசு வழிவகை செய்ய வேண்டும்.

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் எந்த உதவியும் இல்லாததால், "செஸ்' வரியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். பட்டுக்கோட்டையில் நான்கு கோடி ரூபாய் மதிப்பில் தென்னை வணிக வளாகம் அறிவிக்கப்பட்டு இரண்டு ஆண்டாகியும், பணிகள் துவங்கப்படாமல் உள்ளது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**வடகரையில் செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

தென்காசி : வடகரையில் செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடந்தது.தென்காசி வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் வடகரையில் செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடந்தது. வடகரை டவுன் பஞ்.,தலைவர் அஜீஸ் தலைமை வகித்தார். தென்காசி துணை வேளாண்மை அலுவலர் லட்சுமி நாராயணன் பேசும் போது, "செம்மை நெல் சாகுபடி மூலம் அதிக மகசூல் பெறலாம். நடவு பணிக்கு வேலையாட்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால் இயந்திர நடவு முறையை பின்பற்றலாம். ஆர்டர் கொடுக்கும் பட்சத்தில் பாய் நாற்றாங்கால் தயாரிப்பதிலிருந்து இயந்திரம் மூலம் நடவு செய்து தரும் பணி வரை கல்லிடைக்குறிச்சியிலுள்ள விவசாயி செய்ய தயாராக இருக்கிறார்.

ஒரு ஏக்கர் நடவிற்கு 70 தட்டுகளில் வளர்க்கப்பட்ட பாய் நாற்றுகள் தேவை. தட்டு ஒன்றுக்கு நடவு செலவு 35 ரூபாய். இம்முறைப்படி விதை செலவு குறைவு. ஒரு மணி நேரத்தில் ஒரு ஏக்கர் நடவு பணி செய்யலாம். ஏக்கருக்கு 2 ஆயிரத்து 450 ரூபாய் மட்டும் செலவாகும். செம்மை நெல் சாகுபடியில் கோனோவீடர்

கொண்டு களையெடுத்து களைகளை நிலத்திலேயே அமிழ்த்தி விட வேண்டும். ஒரு நேரத்தில் மூன்று வரிசையில் களையெடுக்கக்கூடிய டீசலில் இயங்கும் கோனோவீடர்கள் உள்ளது' என்றார்.

தென்காசி வேளாண்மை அலுவலர் உதயகுமார் பேசும் போது, "விவசாயிகள் அனைவரும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். மண்ணிலிருந்து பயிருக்கு கிடைக்கும் நிலையிலுள்ள சத்துகளி அளவை கண்டறிந்து அதன்படி உரமிட வேண்டும். வெவ்வேறு பயிர்களில் மண் மாதிரி எடுக்க வேண்டும். மண் மாதிரி ஒன்றுக்கு ஆய்வு கட்டணம் 5 ரூபாய் செலுத்த வேண்டும். மண் மாதிரி ஆய்வு முடிவுகள் மண் வள அட்டைகளாக விவசாயிகளுக்கு அளிக்கப்படும். பயறு வகைகளில் பருவத்திற்கேற்ற ரகங்கள் தெரிவு செய்ய வேண்டும். மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்பு சக்தியுடைய ரகங்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். 2 சத டி.ஏ.பி.கரைசல் தெளிப்பதன் மூலம் பயறு வகைகளில் அதிக மகசூல் பெறலாம்' என்றார்.முகாமில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் நாகராஜன், அன்சர் அலி, பரமசிவன் செய்திருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***ஜனவரி – ஏப்ரல் மாத காலத்தில் தேயிலை ஏற்றுமதி 20 சதவீதம் வளர்ச்சி***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஜனவரி–ஏப்ரல்) நாட்டின் தேயிலை ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 20.28 சதவீதம் அதிகரித்து 5.99 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 4.98 கோடி கிலோவாக இருந்தது. இந்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.*
*இதே காலத்தில், தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி வியக்கத்தக்க வகையில் 45 சதவீதம்*

அதிகரித்து 2.25 கோடி கிலோவிலிருந்து 3.26 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. வட மாநிலங்களில் தேயிலை ஏற்றுமதியில் வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. இது, 2.74 கோடி கிலோ என்ற அளவில் உள்ளது.

19 கோடி கிலோ

கடந்த 2008–09–ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 19 கோடி கிலோவாக இருந்தது. இது, சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் 5 சதவீதம் அதிகரித்து 20 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ஏற்றுமதி 5 முதல் 10 சதவீதம் வரை அதிகரிக்கும் என தேயிலை வாரியத்தின் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நடப்பு ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் தேயிலை ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 20.28 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், மதிப்பின் அடிப்படையில் 16.32 சதவீதம் மட்டுமே (ரூ.635.87 கோடி) அதிகரித்து ரூ.739.67 கோடியாக உயர்ந்துள்ளது. இதற்கு சர்வதேச சந்தைகளில் ஒரு கிலோ இந்திய தேயிலைக்கு கிடைத்த விலை ரூ.127.63–லிருந்து ரூ.123.34–ஆக குறைந்ததே காரணமாகும்.

பயன்பாடு

தேயிலை பயன்பாட்டில், உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவிலிருந்து எகிப்து, பாகிஸ்தான், இங்கிலாந்து, ஈரான், ஈராக், ரஷ்யா ஆகிய நாடுகள் தேயிலையை அதிக அளவில் இறக்குமதி செய்கின்றன. இந்தியா சி.டி.சி. வகை தேயிலையையும் ஏற்றுமதி செய்கிறது. இதில் இந்தியாவுடன் கென்யா மற்றும் இதர ஆப்பிரிக்க நாடுகள் கடும் போட்டியில் ஈடுபட்டு வருகின்றன. ஆர்தோடக்ஸ் வகை தேயிலை ஏற்றுமதியில் இந்திய நிறுவனங்களுடன் இலங்கை மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் போட்டியில் ஈடுபடுகின்றன.

சென்ற 2009–ஆம் ஆண்டில், நாட்டின் தேயிலை உற்பத்தி, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.2 சதவீதம் (98.10 கோடி கிலோ) குறைந்து 97.90 கோடி கிலோவாக குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில், தேயிலை உற்பத்தி 100 கோடி கிலோவாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**தொழிற்சாலைகள் வாங்க மறுப்பு: பச்சை தேயிலையை வீட்டு வாசலில் கொட்டும் விவசாயிகள்**

குன்னூர், ஜூன்.10–

தொழிற்சாலைகள் பச்சை தேயிலையை வாங்க மறுப்பதால் விவசாயிகள் தேயிலையை தங்களது வீட்டு வாசல்களில் கொட்டி வைத்துள்ளனர்.

மழை

கடந்த மே மாதம் 2–வது வாரத்தில் இருந்து குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்து வந்தது. தற்போது தென் மேற்கு பருவமழை தொடங்கி விட்டதால் குன்னூர் பகுதியில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. மழையின் காரண மாக காய்ந்த மற்றும் கருகிய தேயிலை செடிகள் நன்கு துளிர் விட்டு வளர்ந்தது.

மேலும் மழையை பயன் படுத்தி, ஒரு சில தோட்டங் களில் உரமிட்டனர். இதன் காரணமாக தேயிலை செடி களில் பச்சை தேயிலை அதிக அளவு வளர்ந்தது. மேலும் கடந்த மே மாதத்தில் இருந்து தேயிலை மகசூல் காலம் தொடங்கியது.

உற்பத்தி அதிகரிப்பு

பச்சை தேயிலையின் மகசூல் அதிகரித்த காரணத் தால், சிறு விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் உள்ள பச்சை தேயிலையை அறுவடை செய்து, தேயிலை தொழிற் சாலைகளுக்கும், பச்சை தேயிலை ஏஜெண்டுகளுக்கும் வழங்கி வந்தனர்.

பச்சை தேயிலையின் வினி யோகம் அதிகரித்ததால் தேயிலை தொழிற்சாலைகளில் தேயிலை உற்பத்தி அதிகரித் தது. தொழிற்சாலை களின் திற னுக்கு மீறி, பச்சை தேயிலை வினியோகம்

செய்யப்பட் டது. இதனால் தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலையை இருப்பு வைக்க இயலாத நிலை ஏற்பட்டது. இதனை தொடர்ந்து தேயிலை தொழிற் சாலைகளில் பச்சை தேயிலை வாங்குவதை, நிறுத்தி வைத்துள்ளனர்.

வாசலில் கொட்டி வைக்கின்றனர்

ஒரு நாள் பச்சை தேயிலை வாங்கினால், 3 நாட்கள் அறு வடை செய்த பச்சை தேயி லையை தொழிற்சாலைகள் வாங்க இயலாத நிலை ஏற்படுகிறது. தேயிலை தொழிற்சாலைகள் பச்சை தேயிலையை வாங்குவதை நிறுத்தி உள்ளதால், பச்சை தேயிலை ஏஜெண்டுகளும், சிறு விவசாயிகளிடம் இருந்து பச்சை தேயிலை வாங்குவதை நிறுத்தி வைத்து உள்ளனர்.

இதனால் சிறு தேயிலை விவசாயிகள் கடும் அவதிக் குள்ளாகி வருகின்றனர். தேயிலை தொழிற் சாலைகளும், பச்சை தேயிலை ஏஜெண்டு களும் பச்சை தேயிலை வாங்கு வார்கள் என்ற நம்பிக்கையில் அறுவடை செய்த விவசாயிகள் தொழிற்சாலைகளும், பச்சை தேயிலை ஏஜெண்டுகளும் வாங்க மறுக்கவே அறுவடை செய்த பச்சை தேயிலையை தங்களது வீட்டு வாசல்களில் கொட்டி வைத்து உள்ளனர்.

இது குறித்து சிறு விவசாயி ஒருவர் கூறியதாவது:–

தற்போது தேயிலை மகசூல் அதிகரித் துள்ளதால், தேயிலை தொழிற்சாலைகளும், பச்சை தேயிலை ஏஜெண்டுகளும் பச்சை தேயிலையை வாங்க மறுத்து வருகின்றனர். தோட் டங்களில் பச்சை தேயிலை வளர்ந்து, முற்றிய நிலையில் உள்ளது. இதனால் எங்களால் தரமான பச்சை தேயிலை கொடுக்க இயல வில்லை. அறுவடை செய்த பச்சை தேயி லையை ஏஜெண்டு களும், தொழிற்சாலை களும் வாங்காததால் எங்கள் வீடு களுக்கு முன்புறம் வாசல் களில் கொட்டி வைத் துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**மலர் சாகுபடியாளர்களின் கடன் தள்ளுபடி செய்யப்படுமா? சிறு விவசாயிகள் எதிர்பார்ப்பு**

குன்னூர், ஜூன்.10–

மலர் சாகுபடி விவ சாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண் டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

மலர் சாகுபடி

நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விசுவநாதன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் காய்கறி மற்றும் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வந்த சிறு விவசாயிகள் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு அரசு அறிவுரையின் பேரில் மலர் சாகுபடிக்கு மாறினோம். மலர் சாகுபடி செய்தால் ஒரு யூனிட்டிற்கு 20 முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் என்று கூறப்பட்டது. தோட்டக்கலை துறை அதிகாரிகள் மலர் சாகுபடியை ஊக்குவித்தனர்.

12 சென்ட் நிலத்தில் ஒரு யூனிட்டிற்கு மலர் சாகுபடி செய்ய 7 லட்ச ரூபாய் வரை செலவு பிடிக்கிறது. ஒரு யூனிட்டிற்கு வங்கி மூலம் 4¾ லட்ச ரூபாய் வரை கடன் வழங்கப்பட்டது.

நல்ல நிலை

1.20 லட்ச ரூபாய் வரை அரசு மானியம் கிடைத்தது. எங்களது நிலம் போன்ற சொத்துக்களை

வங்கியில் அடகு வைத்து வங்கி கடன் பெற்றோம். மலர் சாகுபடியில் நல்ல லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மாவட்டத்தில் சுமார் 700 விவசாயிகள் மலர் சாபடியில் ஈடுபட்டு உள்ளனர்.

வங்கி கடன் மட்டுமின்றி 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகள் கையில் இருந்து பணம் போட்டு மலர் சாகுபடியை மேற்கொண்டோம். ஒரு வருடம் மலர் சாகுபடி நல்ல நிலையில் இருந்தது.

பசுமை குடில்கள் சேதம்

மலர் நாற்றுக்களை பூனாவில் இருந்து வாங்கி வருகிறோம். இந்த நாற்றுக்கள் தரமற்று இருப்பதால் நாற்றுக்கள் அழுகி விடுகின் றன. மலர் நாற்று ரூ.8.50 என்று விலை கொடுத்து வாங்கி வருகிறோம். ஆனால் மலர் ஒன்று ரூ.1.50–க்கு விற்பனையாகி வருகிறது. இடு பொருட்கள் விலை உயர்வால் கையில் இருந்து பணம் போட வேண்டிய நிலை உள்ளது. நீலகிரி மாவட்டத்தின் காற்றும், மழையுமாக இருக்கும் போது பசுமை குடில்கள் சேதம் அடைந்து விடுகிறது. ஆரம்பத்தில் ஒரு வருடம் வங்கி கடனை செலுத்தி வந்தோம். அதற்கு பின்பு கட்ட முடியவில்லை.

நஷ்டம்

விவசாய கடன் தள்ளுபடி அறிவிப்பு வந்த போது எங்களது வங்கி கடனும் தள்ளுபடி செய்யப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் மலர் சாகுபடி என்பது பணப்பயிர் என்பதால் கடன் தள்ளுபடி ஆகாது என்று வங்கியில் கூறி விட்டனர். விவசாயிகள் போர்வையில் மற்றவர்கள் சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலர் சாகுபடியாளர்களின் வங்கி கடன் ரூ.60 கோடி ஆகும். ஆனால் மலர் சாகுபடி யாளர்கள் 80 கோடி ரூபாய் நஷ்டத்தில் உள்ளனர்.

ஒரு செடியில் 20 மலர்கள் பூக்கும் என்றும், ஒரு மலர் ரூ.3–க்கு எடுத்து கொள்ளப் படும் என்றும் ஆரம்பத்தில் கூறினர். ஆனால் தரமற்ற நாற்றுக்களால் ஒரு செடிக்கு 5 அல்லது 6 மலர்கள் மட்டுமே கிடைக்கிறது.

தாய் நாற்றை ஆலந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்து இங்கு நாற்றை உற்பத்தி செய்கின்றனர். இதன் வீரியம் குறைந்து உள்ளதால் தரமற்ற நாற்றுக்களால் மலர் சாகுபடியில் நஷ்டம் அடைந்து உள்ளோம்.

தள்ளுபடி செய்ய வேண்டும்

வங்கி மூலமாக தான் திட்ட அறிக்கை கொடுத்தனர். ஆனால் இந்த அறிக்கைக்கு நேர் மாறாக தற்போது மலர் சாகுபடி உள்ளது. ஊட்டியில் உள்ள ஏல மையத்தில் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து விலையை குறைத்து வருகிறார்கள். எனவே நாங்கள் அங்கு மலர்களை அனுப்புவது இல்லை. தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஊக்குவித் ததால் தான் மலர் சாகுபடியில் ஈடு பட்டோம். நாளடைவில் நஷ்டம் அடைந்த எங்களை தோட்டக்கலை துறை அதிகாரிகள் கண்டுகொள்ள வில்லை. மலர் சாகுபடியில் நஷ்டம் அடைந்துள்ள நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி யாளர்களின் வங்கி கடனை அரசு தள்ளுபடி செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது சங்க துணை தலைவர் சந்திர சேகரன், செயலாளர் கோபால கிருஷ்ணன், பொருளாளர் ராமமூர்த்தி உள்பட செயற்குழு உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.



# வேளாண்மை செய்திகள்

## 'வெட்டி வேர்' சாகுபடி முறைகள்

வெட்டி வேர் ஒருவகையான புல் தாவரம். இது இந்திய மருத்துவத்தில், மருத்துவ பயனுக்காக தொன்று தொட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் வேரில் இருந்து வாசனை எண்ணெய் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் ஆண்டுக்கு 20 டன் வெட்டி வேர் எண்ணெய் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது.



சாகுபடி செய்யப்பட்டுள்ள வெட்டி வேர் புல் தாவரம்.

### மகசூல் தரும் ரகங்கள்

லக்னோவில் மத்திய மருந்து மற்றும் வாசனைப்பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்தில் சி.ஐ.எம். ஏ.பி., கே.எஸ்-1, கே.எஸ்-2, சுகந்தா ஆகிய வீரிய உயர் விளைச்சல் ரகங்கள் நல்ல மகசூல் தரும் ரகங்கள் ஆகும். இந்த ரக வெட்டிவேர்கள் அனைத்து விதமான மண்வகைகளிலும் விளையும் தன்மை கொண்டது. அதிக கார அமிலத்தன்மையுடைய மண்ணிலும், மணற்பாங்கான மண்ணிலும் சிறப்பான விளைச்சல் தரும்.

பொதுவாக வெட்டிவேர் ரகங்கள் வறட்சியை தாங்கி வளரும் தன்மை கொண்டது. எல்லா தட்பவெட்ப நிலையிலும் வளரக்கூடியது. அதிக சாகுபடிக்கு ஆண்டுக்கு 50 சென்டிமீட்டர் மழையளவு இருக்க வேண்டியது அவசியம். சாகுபடி செய்யும் விவசாயிகள் பருவமழை தொடங்கும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடவு செய்வது சிறந்தது.

### நடவு செய்யும் முறை

வெட்டிவேரை தாவரத்தை பயிர்செய்யும் போது நாற்றுகள்(ஸ்லிப்ஸ்) மூலமாக நடவு செய்ய வேண்டும். 20 முதல் 30 சென்டிமீட்டர் உயரமுள்ள வளமான நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். 1 ஏக்கரில் வெட்டிவேர் தாவரத்தை பயிர்செய்ய 3 ஆயிரம் முதல் 3 ஆயிரத்து 500 தூர்கள் வரை தேவைப்படும். 65*45 சென்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 40 கிலோ தழைச்சத்து, 60 கிலோ மணிச்சத்து, 50 கிலோ சாம்பல் சத்துகளை அடி உரமாக போட வேண்டும். தேவைக்கு ஏற்ப 40 கிலோ தழைச்சத்தை மேல் உரமாக இடலாம்.

இதனால் ஏக்கருக்கு 1200 கிலோ வெட்டிவேர் மகசூலாக கிடைக்கும். இதில் 10 கிலோ முதல் 12 கிலோ வரை எண்ணெய் கிடைக்கும். இதனை வாசனை புகையிலை, அழகு சாதன பொருட்கள், நீர் சுத்திகரிப்பு போன்றவற்றில் பயன்படுத்தலாம்.

## மருத்துவ குணம் கொண்ட 'புதினா'

வீட்டுத் தோட்டங்களிலும், வியாபார ரீதியாகவும் வளர்க்கப்படும் தாவரம் புதினா. நமது நாட்டில் உத்திரபிரதேசம், பஞ்சாப், காஷ்மீர், மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சுமார் 15 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் புதினா பயிர் செய்யப்படுகிறது. மருத்துவ குணம் வாய்ந்த புதினாவில் இருந்து பெறப்படும் 'மென்த்தால்' என்ற பொருள் மருந்துகள் தயாரிக்க மூலப் பொருளாக பயன்படுகிறது.

### இரகங்கள்

எம்.ஏ.எஸ்.1, எச்.ஒய்-77, ஆர்.ஆர்.எல்-118 ஆகிய ரகங்களாகும். இந்த 3 ரகங்களிலும் 60 சதவீதம் முதல் 90 சதவீதம் எண்ணெய் பொருள் அடங்கி உள்ளது. இந்த ரகங்களில் இருந்து மென்த்தால் என்ற மருந்து பொருள் தயாரிக்க பயன்படுகிறது.

நல்ல வடிகால் வசதியுடைய மண் வகைகள் ஏற்றது. வளமிக்க மண் வகைகள் அதாவது இரு மண் கலந்த பொறைமண், செம்மண், கரிசல் மண் வகைகள் சாகுபடிக்கு ஏற்றவை. மண்ணின் கார மற்றும் அமிலத்தன்மை 6.9 சதவீதம் முதல் 7 வரை இருப்பது நல்லது.

### தட்பவெப்பநிலை

குளிர்ச்சியான பருவ நிலை உடைய பகுதிகள் சாகுபடிக்கு ஏற்றதாகும். இத்தகைய பகுதிகளில் விளையும் புதினாவில் எண்ணெய் உற்பத்தி அதிகமாக கிடைக்கும். மித வெப்ப மற்றும் வெப்பமான பகுதிகளில் இலை மகசூலும், எண்ணெய் உற்பத்தியும் குறைவாக இருக்கும். ஆண்டு மழை அளவு 100 முதல் 150 சென்டிமீட்டர் இருத்தல் அவசியம். தமிழ்நாட்டில் எண்ணெய் உற்பத்திக்காக உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, ஆனைமலை, கொல்லிமலை, போன்ற மலைப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் சமவெளிப்பகுதிகளிலும் அதிக அளவில் புதினா சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

வேர் செடிகள் மற்றும் நுனித் தண்டுகளை நடவிற்கு பயன்படுத்தலாம். நுனித் தண்டுகள் எளிதாக வேர் பிடிக்கும் தன்மை உடையது. வேர்ச் செடிகளை முன்பு பயிர் செய்யப்பட்டு நன்கு வளர்ந்த செடிகளில் இருந்து பிரித்து நடவுக்கு பயன்படுத்தலாம். வியாபார ரீதியாக வட மாநிலத்தைச் சேர்ந்த வேர்ச் செடிகள் தான் பெரும்பாலும் நடவிற்கு பயன்படுகிறது.

### நிலம் தயார் செய்தல்

நிலத்தை நன்றாக உழுது மண் கட்டிகள், கற்கள் மற்றும் களைகளை அகற்றி ஹெக்டேருக்கு 25 டன் தொழு உரம் இட்டு பண்படுத்த வேண்டும். பிறகு 60 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். வேர்ச்செடிகள் அல்லது நுனித துண்டுகளை ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடவு செய்யலாம். செடிக்கு செடி 45 சென்டிமீட்டர் இடைவெளியிலும், வரிசைக்கு வரிசை 60 சென்டிமீட்டர் இடைவெளியிலும், நட வேண்டும். ஒரு ஹெக்டேரில் நடவு செய்ய சுமார் 37 ஆயிரம் செடிகள் தேவைப்படும். வேர் செடிகளை 10 முதல் 12 சென்டிமீட்டர் நீளமாக வெட்டி பார்களின் பக்க வாட்டில் 7 முதல் 10 சென்டிமீட்டர் ஆழத்தில் நடவு செய்ய வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 50 கிலோ தழைச்சத்து, 75 கிலோ மணிச்சத்து மற்றும் 50 கிலோ சாம்பல் சத்து உரங்களை அடியுரமாக இட வேண்டும். செடிகளை நட்டு நான்கு மாதங்கள் இடைவெளியில் தலா 25 கிலோ தழைச்சத்து உரத்தை மேலுரமாக 3 முறை இடுவது நல்லது. செடிகளுக்கு வாரம் 2 முறை நீர்ப்பாசனம் அளிக்க வேண்டும். வேர்கள் அதிக ஆழமாக செல்லாது. ஆதலால் மண்ணில் எப்போதும் ஈரம் இருத்தல் அவசியம்.

### களை எடுத்தல்-அறுவடை

செடிகள் நன்றாக வளர்ந்து பக்க வாட்டில் செடிகள் தோன்றி படரும் வரை அதாவது முதல் 75 நாட்களுக்கு களைகளை அவ்வப்போது அகற்றி விட வேண்டும். புதினா செடியை பூச்சி மற்றும் நோய்கள் அதிகம் தாக்குவதில்லை. இதனால் பயிர்பாதுகாப்பு தேவை இல்லை.

செடிகளை நட்ட 4-வது மாதத்தில் இருந்து இலைகளை அறுவடை செய்யலாம். தரை மட்டத்தில் இருந்து 5 சென்டிமீட்டர் உயரத்தில் முழுச் செடியை வெட்டி எடுக்கலாம். வெட்டி எடுத்த செடிகளின் தண்டுகளை 24 மணி நேரம் இலேசாக உலரவைத்து பிறகு நீர் ஆவி வடிப்புக்கு உட்படுத்தி எண்ணெய் பிரித்து எடுக்கலாம். அதிக அளவு எண்ணெய் பொருள் கிடைக்க நல்ல சூரிய ஒளி இருக்கும் நாளில் இலைகளை அறுவடை செய்ய வேண்டும்.

### மகசூல்-பயன்கள்

ஒரு ஹெக்டேருக்கு 24 முதல் 30 டன் இலைகள் மகசூலாக கிடைக்கும். இவற்றில் இருந்து 100 முதல் 150 கிலோ வரை எண்ணெய் பொருள் கிடைக்கும்.

புதினா இலையில் இருந்து நீராவி வடிப்பு மூலம் எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டு 'மென்த்தால்' என்ற மருந்துப் பொருள் தயார் செய்யப்படுகிறது. உணவு பொருட்களுக்கு வாசனையை கூட்ட பயன்படுகிறது. செரிமானக் கோளாறும், வாயுத் தொல்லை, வயிற்றுவலி ஆகியவற்றை குணப்படுத்தவும் பயன்படுகிறது. தொண்டை கரகரப்பை உடனடியாக சரி செய்ய 'மென்த்தால்' பயன்படுகிறது.

**தகவல்: ஏ.கபீர், வேளாண் ஆலோசகர், வேளாண்மை நிலையம், தாராபுரம்.**

## வேளாண்மை கேள்வி—பதில்

**கேள்வி: சணல் பொருட்களை தயாரித்து விற்க விரும்புகிறேன். இது பற்றிய தகவல்களை எங்கே பெறமுடியும். மருதமலை, பொள்ளாச்சி.**

பதில்: மத்திய அரசின் சணல் வாரியம் சென்னையில் செயல்படுகிறது. இவர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் சணல் தொடர்பான கைவினைப்பொருட்கள் உற்பத்தியை ஊக்குவித்தல், கண்காட்சி நடத்துவது உள்பட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். சென்னையில் சணல் கொண்டு உருவாக்கப்பட்ட பல விதமான பொருட்களுக்கான விற்பனை மையங்கள் உள்ளன. தென்மாவட்டங்களில் அப்படி எதுவும் இல்லை. உங்கள் முயற்சி சிறப்பானது. சணல் வாரியத்தின் தென்மண்டல அலுவலகத்தை 34, முதல் தளம், கதீட்ரல் கார்டன் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை600034 என்ற முகவரியில் அணுகலாம்.

**கேள்வி: வீரிய மக்காச்சோளம் சாகுபடி பற்றி தெரிந்து கொள்ள விரும்புகிறேன். விவரம் தரவும். மணி, பல்லடம்.**

பதில்: மணீஷா அக்ரி பயோடெக் நிறுவனம் இந்தியா முழுவதும் இது போன்ற வீரிய ரக மக்காச்சோள விதைகளை விற்பனை செய்து வரும் ஒரு நிறுவனம். சமீபத்தில் மதுரை விவசாய கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியில் இந்த ரக விதையில் விளைந்த சோளத்தை பார்வைக்கு வைத்திருந்தார்கள். வறட்சி தாங்கும் திறன், அதிக மகசூல் உள்பட பல சிறப்புகளை கொண்ட இந்த ரக சோளம் பற்றி அறிய 93441 07630 என்ற எண்ணில் அறியலாம்.



**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர், வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி, கோவை–18.**